EC 2016
ERSITY, SRI LANKA

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## இரண்டாம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2013/2014 (ஒக்டோபர்/நவம்பர் 2016)

## SAS 2233 Advanced Anthropological Theory

நேரம் : 03 மணித்தியாலங்கள்

**பகுதி–I இல் இருந்து எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கும், பகுதி–II இல் இருந்து யாதேனும் ஒரு (01) வினாவிற்கும் எல்லாமாக நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

---

## பகுதி – I

01. (அ) பரிணாம வாதம் (Evolutionism) பற்றிய ஆரம்பகால மானுடவியலாளர்களின் கருத்துக்களைச் சுருக்கமாக முன்வைக்க.
(10 புள்ளிகள்)

(ஆ) E.B.டைலரால் (E.B.Tylor) முன்வைக்கப்பட்ட 'பண்பாடு' என்னும் எண்ணக்கருவுக்கான வரைவிலக்கணத்தை எடுத்துரைத்து, அதன் சிறப்பியல்புகளையும் எடுத்துக்காட்டுக.
(15 புள்ளிகள்)

02. (அ) ஹென்றி மோகன் (Henry Morgan) மனிதப்பரிணாமம் பற்றி யாது கூறுகிறார்? சுருக்கமாகத் தெளிவுபடுத்துக.
(10 புள்ளிகள்)

(ஆ) பிரான்ஸ் போவாசினால் (Franz Boas) முன்வைக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்பியல்வாதம் (Historical Particularism) என்னும் எண்ணக்கருவை உதாரணங்களோடு விளக்குக.
(15 புள்ளிகள்)

03. (அ) கட்டமைப்புச் செயற்பாட்டுவாதம் (Structural - Functionalism) தொடர்பான பிரதான சிந்தனைகளை எடுத்துக்காட்டுகளுடன் தெளிவுபடுத்துக.
(10 புள்ளிகள்)

(ஆ) செயற்பாட்டுவாதம் (Functionalism) பற்றிய மானுடவியல் அறிஞர்களின் கருத்துக்களைச் சுருக்கமாக எடுத்துரைத்து, இக்கோட்பாட்டின் மீதான விமர்சனங்களையும் சுருக்கமாக எடுத்துக் காட்டுக.
(15 புள்ளிகள்)

04. (அ) பண்பாட்டுப் பரவல்வாதம் (Diffusionism) என்ன? சுருக்கமாக உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) பண்பாட்டுக்கும் ஆளுமைக்கும் இடையிலான தொடர்புகள் பற்றி ரூத் பெனடிக்ற் (Ruth Benedict) முன்வைத்த சிந்தனைகளைத் தொகுத்துரைக்க.

(15 புள்ளிகள்)

## பகுதி – II

01. "மனிதப் பரிணாம வளர்ச்சியின் பல்வேறுபட்ட அம்சங்கள் தொடர்பான விஞ்ஞானபூர்வமான தேடலே மானுடவியற் கோட்பாடுகளாக விருத்தி பெற்றுள்ளன." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினைத் தக்க எடுத்துக்காட்டுகளுடன் ஆராய்க.

(25 புள்ளிகள்)

02. பண்பாடு என்னும் எண்ணக்கருவை நடுநிலைமையோடு வியாக்கியானம் செய்வதற்கும், மானுடவியல் ஆய்வுப் பாரம்பரியம் செழுமைப்படுவதற்கும் பிரான்ஸ் போவாஸ் (Franz Boas) ஆற்றிய பங்களிப்புகளை விரிவான முறையில் மதிப்பீடு செய்க.

(25 புள்ளிகள்)

*****